DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

| | | | |
|---|---|---|---|
| **OS.No :** | 454/2019 | DW : | 1 |
| **Name:** | ஆனந்தன் | Age: | |
| **Father's Name** | லட்சுமணன் | Village | |
| **Taluk** | | | |
| **Date:** | 20.11.2024 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என் வயது என்ன என்றால் 64. கன்னியம்மாள் என்ன உடன் பிறந்த சகோதரி என்றால் இல்லை சுசிலா, கீதா. சுசிலா என்பவரின் ஜதக பெயர் கன்னியம்மாள் என்றால் சரிதான். கன்னியம்மாள் கணவர் பெயர் குலசேகரன் என்றால் சரிதான். குலசேகரனும் சுசிலாவுக்கும் 2.11.1992 ல் திருமணம் நடந்தது என்றால் சரிதான் அந்த திருமண பத்திரிக்கை வா.த.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்படி கீதா என்பவரின் கணவரின் பெயர் ஜெகன்நாதன் அவரிகளின் திருமண நாள் 6.10.1997 என்றால் சரிதான் அந்த திருமண பத்திரிக்கை வா.த.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடைய நிரூபாண வாக்குமூலத்தில் 1 முதல் 4 வரை என சொத்துகள் விரபள்ளிகுப்ப நாயுடு சொத்துகள் வருவாய் துறை மற்றும் பதிவு துறை சான்று ஆவணங்கள் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் நிருபாண வாக்குமூலத்தில் உள்ள குப்ப நாயுடு பெயரில் வருவாய் மற்றும் பதிவு துறை ஆவணங்கள் என்று கூறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் இல்லை. என்னுடைய சகோதரிகள் குப்ப நாயுடு என்பவருடன் தான் இருந்து வளர்ந்தோம் என்றால் சரிதான். என் சகோதரிகளின் திருமணத்திற்கு பிறகு தான் என் திருமணம் நடந்து என்றால் சரிதான். 1997ல் கீதா திருமணம் நடந்து முடிந்த பிறகு என் திருமணம் நடந்து என்றால் சரிதான். என் திருமணம் நடக்கும் போது என் வயது என்ன மற்றும்

வருடம் என்றால் 22 வயது மற்றும் வருடம் ஞாபகமில்லை. தோரயமாக சொல்லி முடியுமா என்றால் 2002 ஆகும். குப்ப நாயுடு எந்த வருடம் தேதியில் இறந்தார் என்றால் ஞாபகமில்லை. குப்ப நாயுடு இறந்ததிற்காக இறப்பு சான்றிதழ் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் செய்துள்ளேன். அவ்வாறு குப்ப நாயுடு இறப்பு சான்றிதழ் பற்றிய தகவல் என் நிரூபாண வாக்குமூலத்திலும் எனது ஆவண பட்டியலிலும் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளது என்றால் வேறு வேறு தான். என் உடன் பிறந்த சகோதரிகள் திருமணம் நடந்து அவர்களின் கணவருடன் வேறு வேறு கிராமங்களில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். என் சகோதரிகளின் திருமணத்திற்கு முன்பு வரை வழக்கு சொத்தில் பயிர் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். சகோதரிகளின் திருமணத்திற்கு பிறகுவழக்கு சொத்தில் பயிர் செய்து வந்தார்கள் என்றால் இல்லை நான் தான் பயிர் செய்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள பி.த.சா.ஆ.1 என்ன ஆவணம் என்றால் உயில் ஆவணம். அசல் இல்லை சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அந்த உயல் ஆவண எங்கு உள்ளது என்றால் வங்கியில் உள்ளது. வங்கியில் எதற்காக வைத்துள்ளேன் என்றால் வீடு கடனுக்காக வைத்துள்ளேன். குப்ப நாயுடு என் பெயரில் எந்த உயில் ஆவணத்தையும் எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல. குப்ப நாயுடு பெயரில் உள்ள சொத்து அவருக்கு எப்படி வந்து என்ற விவரம் அந்த உயில் ஆவணத்தில் இல்லை என்றால் சரியல்ல. குப்ப நாயுடு இறப்பிற்கு பிறகு வாதிகளும் நானும் மற்ற பிரதிவாதி சகோதரிகள் சேர்ந்து கூட்டாக அனுபவித்து வந்த சொத்து எங்களை தவிர மற்ற யாருக்கும் உரிமை இல்லை என்றால் சரியல்ல நான் மட்டும் தான் அனுபவித்து வருகிறேன். குப்ப நாயுடு இறக்கும் போது எனக்கு 6 வயது என்றால் சரியல்ல என் அப்பா இறக்கும் போ 6 வயது குப்பு நாயுடு இறக்கும் போது 20 அல்லது 22 வயது இருக்கும். நான் 6ம் வகுப்பு படிக்கும் போது என் அப்பா இறந்து விட்டார் பின்னார் குப்பு நாயுடு இறந்துவிட்டார் என்றால் சரிதான். குப்பு நாயுடு இறப்புக்கு முன்பு எப்போது இந்த உயில் ஆவணத்தை எழுதி வைத்தார் என்றால்1979ல் எழுதி வைத்தார். 1979ல் எழுதி வைத்தா உயில் ஆவணத்தை

நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நகல் தாக்கல் செய்துள்ளேன். அப்படி என்றால் 1979ல் எழுதி வைத்த குப்ப நாயுடு 1 முதல் 4 வரையிலான சொத்துகள் என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் ஆவணங்கள் அட்டவணையில் குப்பு நாயுடு எழுதி கொடுத்த உயில் ஆவணத்தில் 1993 என்றும் நான் 1979ல் எழுதி வைத்தார் என்று சொல்கிறீர்கள் இவற்றில் எது உண்மை என்றால் சரியாக தெரியாவில்லை ஞாபகமில்லை. குப்பு நாயுடு என் பெயரில் உயில் ஆவணம் எழுதி வைக்க அவசியமில்லை அவர் இறப்பு தேதி மற்றும் உயில் ஆவணத்தின் வருடம் தவறாக சொல்கிறேன் அதனால் உங்கள் சாட்சியத்தில் உண்மையில்லை என்றால் சரியல்ல. நானும் வாதிகளும் மற்ற பிரதிவாதியாக சகோதரிகள் எங்களுக்குள் பாகப்பிரிவினை செய்து கொள்ள வேண்டிய சொத்து என்றால் சரியல்ல. நான் தாவா சொத்துகளை விற்பனை செய்தது வாதிகளுக்கு தெரியாது என்றும் அப்படி விற்க்கப்பட்ட சொத்தின் கிரைய ஆவணங்கள் மற்றும் என் மகனின் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணங்கள் செல்லத்ததக்கத்தல்ல என்றும் சொன்னால் என்றால் சரியல்ல. வாதிகள் என்னிடம் எந்த வருடம் பாகம் கேட்டாார் என்றால் வாதிகள் கேட்கவில்லை. 8.6.2016 வாதிகள் என்னிடம் பாகம் கேட்டார் நான் பாகம் கொடுக்கததால் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் கேட்கவில்லை கேட்டு இருந்து இருந்தால் கொடுத்திருப்பேன். வாதிகள் பெண் பிள்ளை என்ற காரணத்தினால் வழக்கு சொத்தின் பாகம் கொடுக்கவில்லை என்றும் அறியயம் ஆதயம் வேண்டி பாகம் பிரிக்கவில்லை என்றும் என்றால் சரியல்ல. நான் வாதிகள் மற்ற சகோதரிகள் இந்து கூட்டு குடும்பம் என்றால் சரிதான். அதனால் இந்து கூட்டு குடும்பம் சொத்தில் சம பாகம் உள்ளது என்றால் சரியல்ல. வதுரைப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**